முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1496

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.11.2023,** வெள்ளிக்கிழமை

1. பிரம்மனே சூட்சுமம் பல கண்ட
பிரணவ சக்திமிகு குருராஜனே
வரம்பல பெற்று இந்த கலியுகத்தில்
வல்லமையான தர்மனாக தவராஜனாக வாழும் அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 17 ம் நாள், 03.11.2023, வெள்ளிக்கிழமை)
ஆற்றல்பட அரங்கன் உன் தர்மம்
வரங்களாக எங்கும் பரவி நின்று வையகத்தை காத்து வருக
3. வருகின்ற காலம் தர்மலோகமாகும்
வணங்கி அரங்கன் பெருமைதனை உலகம் ஏற்கும்
ஏற்கவே உலகில் பெருமாற்றம்
இயற்கை பாதுகாப்போடு கூடிய
4. அற்புதமான ஞானத்தலைமைகள் கொண்ட
ஆற்றல்மிக்க ஆறுமுகன் யான் வெளிப்படவே
வெளிப்படவே இந்த உலகில் மாற்றம்
உயர்வாக அரங்கன் தொண்டாலே நடந்தேறும்
5. தயவான அரங்கன் சீடர்படைகள்
தரணி எங்கும் நிரம்பி இனிதே
குறைவில்லாத சேவைகளைப் பெருக்கி
குவலயம் எங்கும் எல்லோரும் சமம் என்கின்ற
6. இறை நிலைப் பெருக
இனிதே உலகம் எல்லாம்
கருணைநிறைந்த அதிகாரிகள் அரசியல்வாதிகள்
களம் காணும் வண்ணம் ஞான ஆட்சிக்காலமாக

7. கலியினில் அரங்கன் சேவையால்
கந்தவேலன் என் வடிவாக வந்த அரங்கன் அவதாரத்தால்
அவதாரத்தால் அற்புதம் நிகழும்
ஆக்கம்தனை அரங்கனுக்கு சர்வ சூட்சுமமாக
8. அனுதினமும் ஆறுமுகன் யான் ஆற்றல் வழங்கி வர
வகைபட அரங்கன் வையகத்தில்
என் சக்தியாக வெளிவந்து
அற்புதங்கள் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–